இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 - முரசு : 84 - ஒலி : 330 - திருவள்ளுவர் ஆண்டு 2057 - ஆனி 27 - சனிக்கிழமை 11 ஜூலை 2026 - மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 330 : Thiruvalluvar Year - 2057 - Aani 27 - Saturday 11 July 2026 - Madurai 8 Pages ₹ 5.00


### கட்டணமில்லா பேருந்துகளைக் குறைத்து – சரிவர இயக்காமல்

# மகளிர் விடியல் பயணத் திட்டத்தைச் சீர்குலைக்கும் த.வெ.க. அரசு!

## பொதுமக்கள் குற்றச்சாட்டு!

**சென்னை, ஜூலை 11-**

**மகளிர் விடியல் பயணத்திட்டத்தை சீர்குலைக்கும் வகையில் செயல்பட்டு வரும் த.வெ.க. அரசு, சென்னையில் கட்டணமில்லா பேருந்துகளை சரிவர இயக்குவதில்லை என குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.**




கடந்த தி.மு.க. ஆட்சியில் மகளிர் விடியல் திட்டத்தின்கீழ் கட்டணமில்லா பேருந்துகள் இயக்கப்பட்டு வந்த நிலையில், தற்போது த.வெ.க. அரசு, பல்வேறு வழித்தடங்களில் மகளிர் விடியல் பேருந்துகளை சரிவர இயக்கவில்லை என பொதுமக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

சென்னை மாநகர போக்குவரத்து கழகம் சார்பில், ஆயிரத்து 724 பேருந்துகள் இயக்கப்பட்டதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், கடந்த 23/6/2026 அன்று வெளியாகியுள்ள தினந்தோறும் இயக்கப்படாத பேருந்துகள் பட்டியலில் 162 கட்டணமில்லா மகளிர் பேருந்துகள் இயக்கப்படவில்லை என்ற தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், மாநகர போக்குவரத்து கழகம் தினந்தோறும் இயக்கப்படாத பேருந்துகள் பட்டியலை வெளியிடுவது வழக்கம். ஆனால், இந்த பட்டியல்கள் வெளியே பரவும் என்பதால் தற்போது அந்த பட்டியல் கடந்த ஒரு வாரமாக வெளியிடாமல் பணியாளர்களுக்கு வாய்மொழியாகவே தெரிவித்து வருவதாக கூறப்படுகிறது.

இதனால், அன்றாடம் பணிக்குச் செல்லக்கூடிய பெண்களுக்கு வரபிரசாதம் போல் இருந்த கட்டணமில்லா பேருந்து பயணம், தற்போது பேருந்துகள் சரிவர இயக்கப்படாததால் பெண்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

# 285 நாள் மவுனம், கரூர் இடைத்தேர்தல் ஸ்டண்ட் !

## தி.மு.க. ஐ.டி.விங் வலைதளப் பதிவு!

**சென்னை, ஜூலை 11-**

**கடந்த ஆண்டு கரூரில் மதியம் 12 மணிக்கு நடக்க வேண்டிய நிகழ்விற்கு, இரவு 7 மணி வரை மக்களைக் காக்க வைத்து, தண்ணீர் மற்றும் உணவு இன்றித் தவித்த கூட்டத்திற்குள் அனுமதி மீறி வாகனத்தைச் செலுத்தி நெரிசலை ஏற்படுத்தியது த.வெ.க.வின் பொறுப்பற்ற விளம்பர மோகம்.**

குழந்தைகள் மற்றும் பெண்கள் எனப் பல உயிர்கள் பலியான போது, பொறுப்பின்றி அங்கிருந்து ஓடி மறைந்த விஜய், 285 நாட்கள் கழித்து இன்று அதே இடத்திற்குச் செல்வது பாதிக்கப்பட்ட மக்களுக்குச் செய்யும் துரோகம்.

ஆட்சிக்கு வந்தவுடன் உண்மையை மறைக்க 19 காவல் அதிகாரிகளை இடமாற்றம் செய்ததோடு, இன்று பலியானவர்களின் குடும்பங்களுக்கு அரசு வேலை வழங்குவதாக அறிவித்திருப்பது தங்களின் குற்றத்தை மறைக்கப் பயன்படுத்தும் மலிவான வாக்குக்கமிஷன்நாடகம்.

குதிரை பேரத்தில் வாங்கப்பட்ட அ.தி.மு.க. எம்.எல்.ஏ.வின் தொகுதியில் இடைத்தேர்தலை வெல்ல, உயிரிழந்தவர்களின் ரத்தத்தின் மீது நின்று அரசியல் செய்வது விஜய்யின் அதிகாரத் திமிரையும், நிர்வாகச் சீர்கேட்டையும் அப்பட்டமாகக் காட்டுகிறது.

என்னை வரவிடாமல் தடுத்தனர் என்று மேடையில் அழும்நாடகத்தை நிறுத்திக் கொள்ளுங்கள். அங்கிள் விஜய் அவர்களே; உங்கள் கைகளில் படிந்திருக்கும் ரத்தக் கறை, அரசு வேலை கொடுக்கும் இந்த இடைத்தேர்தல் ஸ்டண்ட் நாடகத்தால் என்றும் மறைந்துவிடாது.

### கரூர் கொடுந்துயரச் சம்பவ வழக்கு:

# பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தற்காலிகப் பணி மட்டுமே வழங்க வேண்டும் !

## த.வெ.க. அரசுக்கு உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவு!

மதுரை, ஜூலை 11-

கரூர் கொடுந்துயர வழக்கில், 41 பேரின் குடும்பத்திற்கு தற்காலிக பணி மட்டுமே வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசுக்கு உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவிட்டுள்ளது. இந்த வழக்கில் நீதிமன்றமே இறுதி முடிவு எடுக்கும் என்றும் நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

கரூர் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த 41 பேரின் குடும்பங்களுக்கு அரசு வேலை வழங்க இடைக்கால தடைவிதிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்ட பொதுநல மனுக்கள் மீதான விசாரணை உயர்நீதிமன்ற மதுரை கிளை அமர்வில் நடைபெற்றது. இருநீதிபதிகள் அமர்வு முன் நடைபெற்ற வழக்கு விசாரணையில், கரூர் கொடுந்துயர வழக்கு விசாரணையை உச்ச நீதிமன்ற கண்காணிப்பில் சிபிஐ நடத்தி வருவதாகவும், இந்நிலையில், 41 பேரின் குடும்பங்களுக்கு கருணை அடிப்படையில் பணி வழங்கினால், சாட்சிகள் பிறழ்சாட்சிகளாக மாற வாய்ப்புள்ளதாக மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது.

மேலும், கும்பகோணம் மகாமகம் சம்பவம், ஸ்டெர்லைட் துப்பாக்கிச்சூடு, தர்மபுரி பேருந்து எரிப்பு சம்பவங்களில் வேலைவாய்ப்பு வழங்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. அப்போது குறுக்கிட்ட நீதிபதிகள், கரூர் கொடுந்துயரத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு தற்காலிக பணியாணை மட்டுமே வழங்க வேண்டும் என்றும், இந்த வழக்கில் இறுதி முடிவை நீதிமன்றமே எடுக்கும் என்றும் கூறி, வழக்கு விசாரணையை ஜூலை 21ம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

இந்த வழக்கில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தையும் இணைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# ஜூலை 19ஆம் தேதி, நாடாளுமன்ற அனைத்துக்கட்சிக் கூட்டம் !

புதுடெல்லி, ஜூலை 11-

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் வரும் 20ம் தேதி தொடங்கப்பட உள்ள நிலையில், 19ம் தேதி அனைத்துக்கட்சிக் கூட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர், வரும் 20ம் தேதி தொடங்கி ஆகஸ்ட் 13 வரை நடைபெறவுள்ளது.

இந்நிலையில், வரும் 19ம் தேதி அனைத்து நாடாளுமன்ற கட்சிகளின் கூட்டத்துக்கு ஒன்றிய



அரசு அழைப்பு விடுத்துள்ளது.

நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட உள்ள மசோதாக்கள், விவாதங்கள் குறித்து இந்த கூட்டத்தில் ஆலோசனை நடத்தப்பட உள்ளது.

அரசு தரப்பில் உயர்கல்வி ஆணையம் அமைக்கும் புதிய மசோதா, அமைச்சர்கள், முதலமைச்சர், பிரதமர் 30 நாட்கள் சிறை வைக்கப்பட்டால் தாமாக பதவி பறிக்கப்படும் மசோதா, புதிய பங்குச்சந்தை மசோதா, நாடாளுமன்ற தொகுதி மறுவரையறை மசோதா உள்ளிட்ட முக்கிய மசோதாக்களை தாக்கல் செய்ய ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளது.

எதிர்க்கட்சிகளை பொறுத்தவரை, முக்கிய பிரச்சனைகளான அயோத்தி ராமர் கோயில் உண்டியல் நன்கொடை மோசடி, E20 எத்தனால் பெட்ரோல் விவகாரம், பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு விலை உயர்வு, தொடர்ச்சியாக சேதமடைந்துவரும் தேசிய நெடுஞ்சாலைகள் உள்ளிட்ட பிரச்சனைகளை நாடாளுமன்றத்தில் எழுப்ப திட்டமிட்டுள்ளன.

### அயோத்தி ராமர் கோயில் நன்கொடையில்

# திருடப்பட்ட பணம் பங்குச் சந்தையில் முதலீடு !

## குற்றவாளிகளின் வங்கிக் கணக்குகள் முடக்கம் !

அயோத்தி, ஜூலை 11-

பா.ஜ.க. ஆளும் உத்தரப்பிரதேச மாநிலம் அயோத்தியில் உள்ள ராமர் கோயிலில் நன்கொடைகளை எண்ணும் பணியில் முறைகேடுகள் நடந்ததாகக் கண்டறியப்பட்டதைத் தொடர்ந்து, சர்ச்சை வெடித்துள்ளது.

முறைகேடு தொடர்பாக 8 பேர் மீது வழக்குப் பதிவு செய்து சிறப்பு புலனாய்வுக் குழு விசாரணை நடத்தி வருகிறது.

திருடப்பட்ட நன்கொடைப் பணம் பங்குச் சந்தையில் முதலீடு செய்யப்பட்டதையும், வட்டிக்குக் கடன் கொடுக்கப்பட்டதையும் முக்கிய குற்றவாளி அனுகல்ப் மிஷ்ரா மற்றும் மற்றொரு குற்றவாளியான அவினாஷ் ஆகியோர் ஒப்புக் கொண்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பணத்தை அவர்கள் நெருங்கிய கூட்டாளிகள் மற்றும் உறவினர்களிடையே பகிர்ந்தளித்ததாகவும், பின்னர் பரிவர்த்தனைகளை மறைப்பதற்காக அந்த நிதியைத் தங்கள் சொந்த வங்கிக் கணக்குகளுக்குத் திரும்ப மாற்றிக்கொண்டதாகவும் கூறப்படுகிறது.

இதுதொடர்பாக, குற்றவாளிகள் மற்றும் அவர்களின் உறவினர்களுக்குச் சொந்தமான 30 வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தி.மு.க.அறிவித்த மக்கள் நலத் திட்டங்கள் முடக்கம்!

# சமூக வலைதளங்கள் மூலம் ‘ரீல்ஸ்’ போட்டு மக்களை ஏமாற்றும் ‘அல்காரிதம்’ ஆட்சி !

## சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மு.அப்பாவு குற்றச்சாட்டு!

நெல்லை, ஜூலை 11-

தி.மு.க. அறிவித்த மக்கள் நல திட்டங்கள் முடக்கப்படுகிறது. யூடியூப், இன்ஸ்டாகிராம், எக்ஸ் தளம் மூலம் ‘ரீல்ஸ்’ போட்டு மக்களை ஏமாற்றும் த.வெ.க.அரசு ‘அல்காரிதம்’ ஆட்சி தமிழகத்தில் நடைபெறுகிறது. என்றும் மேகதாது அணை விவகாரம், கன்னியாகுமரியில் அணுக்கனிம சுரங்கங்களுக்கு அனுமதி அளித்தது, சிறுபான்மையினருக்கான 3.5 சதவீத இடஒதுக்கீடு மற்றும் தேவாலயம்/மசூதி கட்ட அனுமதிப்பதில் உள்ள சிக்கல்கள் உள்ளிட்ட பிரச்சனைக்களில் தமிழக மக்களுக்கு எதிராகவே த.வெ.க. அரசு செயல்படுகிறது.என நெல்லையில் முன்னாள் சட்டபேரவை தலைவர் மு.அப்பாவு தெரிவித்தார்.

நெல்லை மாவட்டம் இராதாபுரம் சட்டமன்ற தொகுதியில் தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட மாவட்ட தலைமை மருத்துவமனைக்கு நிரந்தர பணியாளர்களை நியமிக்க வேண்டுவது, சர்வதேச விளையாட்டு மைதானம் உள்ளிட்ட திட்டபணிகளை விரைந்து முடிக்க வலியுறுத்தி முன்னாள் பேரவை தலைவர் மு.அப்பாவு நெல்லை மாவட்ட ஆட்சியர் ஆனந்த மோகனை நேரில் சந்தித்து மனு அளித்தார்.

பின்னர் முன்னாள் பேரவை தலைவர் மு.அப்பாவு செய்தியாளர்களிடம் கூறியதாவது :-

நெல்லை மாவட்டம் வள்ளியூரில் முந்தைய தி.மு.க.ஆட்சிக்காலத்தில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் நிதி ஒதுக்கப்பட்டு, 200 படுக்கை வசதிகளுடன் கட்டப்பட்ட மாவட்ட தலைமை மருத்துவமனை முன்னாள் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால்



திறந்து வைக்கப்பட்ட இந்த மருத்துவமனையில் தற்போது வரை நிரந்தர பணியாளர்கள் நியமிக்கப்படவில்லை, சுமார் 90 செவிலியர்கள், 50க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் மற்றும் 100க்கும் மேற்பட்ட தொழில்நுட்ப வல்லுநர்கள் தேவைப்படும் நிலையில், தற்காலிக பணியாளர்களைக் கொண்டு இயங்குவதால் மாவட்டத்தின் பிற மருத்துவமனைகளும் பாதிக்கப்படுகிறது. உடனடியாக நிரந்தர பணியாளர்களை நியமிக்க வேண்டும்.

மேலும் இராதாபுரம் அருகே விஜயாபதி கிராமத்தில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தொடங்கப்பட்ட சர்வதேச தரத்திலான விளையாட்டு மைதானப் பணிகள், சண்முகபுரம் உயர்நிலைப் பள்ளியில் 49 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வகுப்பறைகள் கட்டும் பணி மற்றும் வள்ளியூரில் ‘ஒன் ஸ்டாப் சென்டர்’ பணிகள் ஆகியவை தற்போதைய ஆட்சியில் சுணக்கம் கண்டுள்ளது.

இதுகுறித்து ஆட்சியரிடம் மனு அளித்துள்ளோம் இந்த கோரிக்கைகள் குறித்து விரைந்து நடவடிக்கை எடுக்காவிட்டால் மக்களை திரட்டி போராட்டம் நடத்தப்படும். தற்போது தமிழகத்தில் நடக்கும் ஆட்சி அல்காரிதம் ஆட்சி யூடியூப், இன்ஸ்டாகிராம் போன்ற சமூக வலைதளங்கள் மூலம் ‘ரீல்ஸ்’ போட்டு மக்களை நம்ப வைக்கும் ஆட்சி.

முன்னாள் அமைச்சர் உதயகுமார் அவர்கள் கூறியது போல,டாஸ்மாக்கில் 800 கோடி ரூபாய் முறைகேடு நடந்துள்ள தாகவும், நிர்ணயிக்கப்பட்ட விலையை விட கூடுதல் விலைக்கு மது விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவித்துள்ளார், அந்த குற்றச்சாட்டை நானும் வழிமொழிகிறேன். வழக்கறிஞர்கள் நியமனத்தில் ஊடல் நடந்துள்ளதாக த.வெ.க. வினரே கூறுகின்றனர்.

பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களை நியமிப்பதற்கான தேடுதல் குழுவில், யுஜிசி உறுப்பினர்களைச் சேர்ப்பது மாநில உரிமைகளைப் பறிக்கும் செயல், 2014 - 16 முதல் ஒன்றிய அரசு யுஜிசி நிதியை முறையாக வழங்கவில்லை.அதற்குப் பதிலாக ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்தைப் புகுத்த ஒன்றிய அரசு முயற்சித்து வருகிறது. துணைவேந்தர்நியமனத்தில் யுஜிசி உறுப்பினர்களை சேர்க்க ஒப்புதல் அளித்துள்ளதாக உயர்கல்விதுறை அமைச்சர் கூறியுள்ளார். இதுபோன்று ஒன்றிய அரசுக்கு பயந்து மாநில அரசு மேகதாது அணை விவகாரம், கன்னியாகுமரியில் அணுக்கனிம சுரங்கங்களுக்கு அனுமதி அளித்தது, சிறுபான்மையினருக்கான 3.5 சதவீதம் இடஒதுக்கீடு மற்றும் தேவாலயம்/மசூதி கட்ட அனுமதிப்பதில் உள்ள சிக்கல்கள் உள்ளிட்ட பிரச்சினைகளில் தமிழக மக்களுக்கு எதிராகவே த.வெ.க. அரசு செயல்படுகிறது.

அதானி போன்ற கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு விமான நிலையங்கள் மற்றும் துறைமுகங்களை ஒன்றிய அரசு தாரை வார்ப்பது போல் பல்கலைக் கழகங்களும் தனியாரிடம் ஒப்படைப்பதற்கான முயற்சி நடக்கிறது . கடந்த 59 நாட்களில் இந்த அரசு மக்கள் நலனைப் புறக்கணித்து, ஒன்றிய அரசின் நிழல் அரசாகச் செயல்படுகிறது. அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து எதிர்க்க வேண்டும்.

இவ்வாறு முன்னாள் பேரவை தலைவர் மு.அப்பாவு கூறினார்.

அப்போது ஒன்றிய செயலாளர்கள் ஜோசப் பெல்சி, பி.சி.ராஜன் ஆகியோர் உடன் இருந்தனர்.